# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## இரண்டாம் ஆண்டு – நான்காம் பருவம்

## ஜனவரி–பிப்ரவரி 2025
## P104 – காப்பியங்களும் சங்க இலக்கியமும்

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சேக்கிழார் இயற்றிய காப்பியம் யாது?
2. வடமொழியில் இராமாயணத்தை இயற்றியவர் யார்?
3. குடுமித்தேவர் எங்கு வீற்றிருக்கின்றார்?
4. சிந்தாமணி என்றால் என்ன?
5. வில்லிபாரதத்தில் எத்தனைச் சருக்கங்கள் உள்ளன? அவையாவை?
6. விதுரன் எத்தகையப் பண்பு உள்ளவன்?
7. பாரதிதாசன் இயற்றிய மூன்று கவிதைக் காவியங்களைக் குறிப்பிடுக.
8. வாணிதாசன் எந்தெந்த இதழ்களில் கவிதைகள் எழுதினார்?
9. பெரும்பொழுதுகள் எத்தனை? அவையாவை?
10. எட்டுத்தொகையில் அகப்பாடல்கள் யாவை?
11. தொண்டி நகரின் தேன்மணம் எதனைக் குறிப்பாக உணர்த்துகிறது?
12. நான்காம் பத்து பாடியவர் யார்? பாடப்பட்டவர் யார்?
13. வள்ளைப்பாட்டு என்றால் என்ன?
14. செலவு அழுங்குவித்தல் என்பதன் பொருள் யாது?
15. கைக்கிளை என்றால் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. காப்பிய மரபினை விளக்குக.
2. சீவகனுடன் விமலைக்குத் திருமணம் நடந்த விதத்தினை எழுதுக.
3. சூளாமணியின் காப்பிய அமைப்பினை விவரி.
4. வாணிதாசனின் தமிழச்சி காப்பியத்தின் கதைமாந்தர்களைக் கூறுக.
5. தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள அகத்திணைகளுக்கு உரிய புறத்திணைகளை எழுதுக.
6. நெய்தல் திணைக்குரிய கருப்பொருளகளைக் குறிப்பிடுக.
7. விரிச்சி கேட்டல் என்றால் என்ன? விளக்குக.
8. ஏறிய மடல் திறம் – குறிப்பு வரைக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. அ) சிலப்பதிகாரத்தின் வழக்குரை காதையை விரித்தெழுதுக.

   (அல்லது)

   ஆ) பெரியபுராணத்தின் கண்ணப்ப நாயனார் புராணத்தை விளக்குக.

2. அ) பாரதிதாசனின் வீரத்தாய் உணர்த்தும் தமிழ் உணர்வையும் சமூக சீர்திருத்த உணர்வையும் விளக்கி உரைக்க.

   (அல்லது)

   ஆ) புறநானூற்றில் ஆற்றுப்படை பயின்றுள்ள விதத்தினைத் தொகுத்தெழுதுக.

3. அ) எட்டுத்தொகையில் பதிற்றுப்பத்து குறித்து விவரிக்க.

   (அல்லது)

   ஆ) சங்க இலக்கிய குறிஞ்சித்திணைப்பாடல்களின் சிறப்புகளையும் இலக்கிய நயங்களையும் கட்டுரைக்க.

***